1989 ஏப்ரல் 26]

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவரவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியம் ஆயிரக்கணக்கான கோடி கடன்பெறும் சங்கடத்திற்கு அது ஆளாக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் அறிவார்கள். பொதுவாக, இரண்டு கருத்துக்கள் இருக்கின்றன. கிராமங்களில் அல்லது நகரங்களில், தெரு விளக்குகளைப் பராமரிக்கின்ற பொறுப்பு உள்ளாட்சி நிர்வாகத்திடமே இருக்க வேண்டுமென்பது ஒன்று. இன்னொன்று, மின்சார வாரியத்திடம் ஒப்படைக்க வேண்டுமென்ற கருத்து. இந்த இரண்டு கருத்துக்களையும் பரிசீலித்துத்தான் பிறகு முடிவு செய்ய வேண்டும்.

கீழ் பவானி பாசனப் பகுதி.

136—(*வினா எண். 252)—திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், கோபி வட்டம் சந்திராபுரம் புங்கங்காட்டு கிராமம் கீழ் பவானி பாசனத் திட்டத்தில் இருந்து கழிவுநீர் பாசனத்தில் பாசனப் பகுதி சேர்க்கப்பட்டுள்ளதை மாற்றி மீண்டும் கீழ் பவானி பாசனப் பகுதியில் சேர்க்க வேண்டும் என்று அரசுக்குக் கோரிக்கை ஏதும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : (அ) ஆம்.

(ஆ) அந்த மனுக்கள் மீது தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களுடைய பரிசீலனையில் இருக்கின்றன.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தலைமைப் பொறியாளருடைய பரிசீலனையில் இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். கீழ் பவானி பாசனத் திட்டத்திலேயிருந்து எந்த ஆண்டு கழிவுநீர் கசிவுநீர்ப் பாசனத் திட்டத்தில் இணைக்கப்பட்டது ? இப்பொழுது குறிப்பிட்ட நாளுக்குள்ளேயே மீண்டும் கீழ் பவானி பாசனத் திட்டத்திலே இணைத்துக் கொள்ளுகின்ற பரிசீலனையைச் செய்து அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர்வர்களே, நான் காண்டுக் காலத்திற்கு முன்னால் இது கீழ் பவானியாற்றின் பாசனத் திட்டத்திலேயிருந்து எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரி

கிறது. மீண்டும் இதை அதே திட்டத்தில் கொண்டு வருவதற்கு கீழ் பவானித் திட்டத்தை நவீனப்படுத்தும் நேரத்தில் இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளலாம் என்று அரசு கருதுகிறது.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நீண்ட நெடுங்காலமாக அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகள் கடை கோடியிலே இருக்கின்ற காரணத்தினாலே அந்தக் கழிவு நீர்ப்பாசனங்களில் சரியான முறையிலே விவசாயம் செய்ய முடியாத நிலை இருக்கிறது. அமைச்சரவர்கள் பதில் சொல்கின்ற நேரத்தில், கீழ் பவானி பாசனத் திட்டத்தை சீரமைக்கின்ற நேரத்திலே அதை எடுத்துக் கொள்வதாகக் குறிப்பிட்டார்கள். எப்பொழுது அதைச் சீரமைக்க இருக்கிறார்கள் ? எப்பொழுது அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகளுக்கு நல்லமுறையிலே, சீரான முறையிலே, தண்ணீர் வழங்க இருக்கின்றார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, கடை கோடிப் பகுதியிலே இருக்கின்ற அந்தப் பகுதிக்கு நீர் கிடைக்கவில்லை. கிடைக்காமலிருப்பதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. கீழ்பவானி அணைக்குச் சென்ற நான்கைந்தாண்டுக் காலமாகப் போதிய நீர் வரவில்லை. ஆகையினாலே இந்தக் கால்வாயிலே தண்ணீரை விட முடியவில்லை. இரண்டாவது காரணம் பாண்டியபாளையம் கசிவுநீர்த் திட்டத்திற்கு உட்பட்டு இருப்பதுதான் இந்த சந்திராபுரம் புங்கங்காட்டு கிராமம். அந்த அணைக்கு வருகிற வழியில் பள்ளத்தாக்குப் பகுதியில் குறுக்கே பலர் சட்டத்திற்குப் புறம்பாக பம்ப் செட் போட்டு விவசாயம் செய்து வருகிறார்கள். அப்படி சட்டத்திற்குப் புறம்பாகத் தண்ணீர் எடுப்பது குற்றம். அவைகளைக் கட்டுப்படுத்த வேண்டும். ஆனால் எதை எப்படி பார்த்தாலும் இப்போது அணையிலும் நீர் இல்லை, வாய்க்காலிலும் நீர் இல்லை. எனவே, இவைகளையெல்லாம் கட்டுப்படுத்தி நீர் வருகிற காலத்தில் விரைவில் அரசு துரித நடவடிக்கையெடுத்து ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தொகுதிக்காரர் என்ற முறையில் திரு. வி. கே. சின்னசாமி அவர்களுக்குத் துணை வினா எழுப்ப வாய்ப்பளிக்கிறேன்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்வது இந்த எஸ்.ஐ.எம்.பி. என்பதில் கீழ்பவானி பாசனத்தில் ஆயக்கட்டுகள் சேர்ந்த பூமியில் பாய்கிற தண்ணீர் வீணாகச் செல்கிறது. அதைத் தடுத்து இந்த கசிவுநீர்க் குட்டை கட்டி

1989 ஏப்ரல் 26]

அதன் மூலமாக பாசனம் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தந்தார்கள். ஆனால் வரி விதிப்பதை எல்லா ஆயக்கட்டுகளுக்கும் சேர்த்து மதகுகளில் வரும் தண்ணீருக்கும், இந்த எஸ்.ஐ.எம்.பி.-க்கும் இரண்டிற்கும் ஒரே சீரான வரிவிதிப்பை விதிக்கிறார்கள். ஆனால் சில நேரங்களில் தண்ணீர் வராத காரணத்தால் அது வறண்டு காய்ந்து விடுகிறது. கிட்டத்தட்ட 20 ஆயிரம் ஏக்கர்கள் புதியதாக ஆயக்கட்டுகள் சேர்க்கப்படும் என்று பொதுப்பணித்துறை அதிகாரிகளிடமிருந்து அரசுக்கு பரிந்துரை வரப்பெற்றதாக தகவல் அறிகிறோம். அப்படி சேர்க்கப்படுகிற காலக்கட்டத்தில் இந்த எஸ்.ஐ.எம்.பி.-யில் சேர்ந்திருக்கிற பூமிகளும் அதோடு சேர்க்கப்படுமா? அதற்கு தனியாக மதகு வைத்து நீர்ப்பாசனம் பெறுவதற்கு வழிவகைகளை அரசு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே தெரிவித்து இருக்கிறார்கள். பொதுப்பணித்துறையிலிருந்து எங்களுக்கு பரிந்துரை தான் வந்திருக்கிறது. அது அரசினுடைய ஆய்விலே இருக்கிறது. ஆய்வு முடிந்த பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் இந்த அவைக்கும் தெரிவிக்கப்படும்.

திருவையாறு பேரூராட்சியில் பாதாள சாக்கடை அமைத்தல்.

137—(*வினா எண். 219)—திரு. துரை சந்திரசேகரன் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், திருவையாறு பேரூராட்சியில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது தொடங்கப்பெறும்?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.